தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.08.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**விவசாயிகளுக்கு பார்த்தீனியம் பற்றிய விழிப்புணர்வு**

ஆகஸ்ட் 16 முதல் 22 வரையிலான பார்த்தீனிய விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு விவசாயிகள், பண்ணைத் தொழிலாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், சுகாதார பணியாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்கு பார்த்தீனியம் பற்றியும் அதன் தீமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் விழிப்புணர்வு முகாம்கள் ஒன்றிய அரசின் களை மேலாண்மை ஆராய்ச்சி இயக்குநகரத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த களை மேலாண்மைத் திட்டம், உழவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

இதனையொட்டி ஆகஸ்ட் 21 ஆம் தேதி அன்று பல்லடம் வட்டம் சித்தம்பலம் புதூர் என்ற கிராமத்தில் விவசாயிகளுக்கு இடையே பார்த்தீனிய மேலாண்மை குறித்து விழிப்புணர்வில் இந்த நச்சுக்களையை உழவியல், இரசாயன மற்றும் உயிரியல் முறைகளைப் பின்பற்றி கட்டுப்படுத்துவதைப் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த களை பூப்பதற்கு முன் நிலத்திலிருந்து அகற்றி உரமாக்கி மண்ணின் வளத்தை மேம்படுத்தும் தொழில் நுட்ப செயல் விளக்கமும் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உழவியல் துறை பேராசிரியர் மற்றும் களை மேலாண்மை முதன்மை விஞ்ஞானி முனைவர் செ. ராதாமணி, இணைப்பேராசிரியர் முனைவர் ச. பாரதி ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்